பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 06 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- ஜி-ஏழு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று இத்தாலி செல்கிறார்.
- குவைத்தில் நேரிட்ட தீ விபத்து தொடர்பாக நிவாரண பணிகளை மேற்கொள்ள வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் இன்று அந்நாட்டுக்குச் செல்கிறார்.
- வேளாண் உற்பத்தியை அதிகரிக்க சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் என அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்திற்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு க ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
- **Perugia** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ஜி-ஏழு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இத்தாலி புறப்பட்டுச் செல்கிறார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செயலர் திரு **Vinay Mohan Kwatra**, இத்தாலி பிரதமரின் அழைப்பை ஏற்று, இப்பயணத்தை திரு நரேந்திர மோடி மேற்கொள்ள உள்ளதாகக் கூறினார்.

பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக திரு நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ள தலைவர்களுடன் பிரதமர் ஆலோசனை நடத்த உள்ளதாகவும் திரு **Vinay Mohan Kwatra** கூறினார்.

ஜி-ஏழு உச்சி மாநாடு இன்று தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறும் அமர்வில் பிரதமர் திரு நரேந்திரமோடி பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

குவைத்தில் நேரிட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தில்லியில் தமது இல்லத்தில் அதிகாரிகளுடன் பிரதமர் ஆலோசனை மேற்கொண்டார்.

நிவாரண நடவடிக்கைகளை பார்வையிடவும், உயிரிழந்தவர்களின் உடல்களை விரைவாக இந்தியா கொண்டுவர நடவடிக்கை எடுக்கவும், வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங்கை குவைத் செல்லுமாறு பிரதமர் கேட்டுக் கொண்டார்.

உயிரிழந்த இந்தியர்களின் குடும்பங்களுக்கு பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு கீர்த்திவர்தன் சிங், பிரதமரின் முதன்மை செயலாளர் திரு பி கே மிஸ்ரா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், வெளியுறவுத் துறைச் செயலாளர் திரு வினய் குவாத்ரா மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதனிடையே குவைத்தில் உள்ள இந்திய தூதர் திரு ஆதர்ஷ் ஸ்வைகா, காயம் அடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனைகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

தீ விபத்து நடைபெற்ற அடுக்குமாடி கட்டடத்தையும் அவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிலையில் இந்த தீ விபத்து குறித்து வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர், குவைத் வெளியுறவு அமைச்சர் திரு அப்துல்லா அலி அல்-யஹ்யாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

குவைத்தின் மங்காஃப் நகரில் தொழிலாளர் குடியிருப்பில் நேரிட்ட தீ விபத்தில் 49 பேர் உயிரிழந்ததாகவும், இவர்களில் 40 பேர் இந்தியர்கள் என தெரிய வந்துள்ளதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

50 பேர் காயம் அடைந்திருப்பதாகவும் வெளியுறவுத் கூறியுள்ளது.

தீ விபத்து நேரிட்ட கட்டடத்தில் கேரளா மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதிகம் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து தொடர்பான விவரங்களை அறிந்து கொள்வதற்கு குவைத்தில் உள்ள இந்திய தூதரகம் 965-6 5 5 0 5 2 4 6 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அறிவித்துள்ளது.

இதனிடையே இந்த தீ விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த யாராவது பாதிக்கப்பட்டுள்ளனரா என தகவல் சேகரிக்கப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இந்த விபத்து தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள தமிழக அரசும் தொலைபேசி உதவி எண்களையும் அறிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

அருணாச்சல பிரதேச முதலமைச்சராக பிஜேபி-யின் திரு **Pema Khandu** இன்று மீண்டும் பதவியேற்கிறார்.

இட்டாநகரில் உள்ள டோர்ஜிகாண்டு மாநாட்டு மையத்தில் காலை 11 மணிக்கு நடைபெறும் பதவியேற்பு நிகழ்ச்சியில் ஆளுநர் திரு கே டி பர்நாயக் அவருக்கு பதவிப்பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் திரு அமித்ஷா, திரு ஜெ பி நட்டா, பிஜேபி பொதுச்செயலாளர் திரு பி எல் சந்தோஷ் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

முன்னதாக இட்டாநகரில் நடைபெற்ற பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் திரு பெமா கண்ட் சட்டப்பேரவை கட்சித் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இக்கூட்டத்தில் கட்சியின் மேலிட பார்வையாளர்கள் திரு ரவிசங்கர் பிரசாத் மற்றும் திரு தருண்சுக் பங்கேற்றனர்.

இதையடுத்து நேற்று மாலை திரு பெமா காண்டு ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைப்பதற்கு உரிமை கோரினார். முரு/ச தில்லி /14

வேளாண் உற்பத்தியை அதிகரிக்க சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் என அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

வேளாண் அமைச்சகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய 100 நாள் செயல்திட்டம் குறித்து புதுதில்லியில் உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

இத்துறையை வலுப்படுத்தவும், விவசாயிகளின் பிரச்சினைகளை களையவும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டார்.

விவசாயிகளுக்கு தரமான உரங்கள், விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் உரிய நேரத்தில் கிடைப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டுமென்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌஹான் அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளின் சதித்திட்டங்கள் தொடர்ந்து முறியடிக்கப்பட்டு வருவதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஹிராநகர் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் காயம் அடைந்த வீரர்களை சந்தித்து நலம் விசாரித்த பின், கத்துவாவில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக காஷ்மீர் பள்ளத்தாக்கில் தீவிரவாதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

**[]<<<>>>[]**

பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் உள்ளூர் அளவில் வலுவாக செயல்படுத்தப்பட வேண்டும் என பிரதமரின் முதன்மைச் செயலாளர் திரு பி கே மிஸ்ரா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த பேரிடர் நிவாரண ஆணையர்கள், பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் தீயணைப்புத் துறையினர் பங்கேற்ற இரண்டு நாள் மாநாட்டின் நிறைவு விழாவில் அவர் பங்கேற்று பேசினார்.,

பேரிடர் காலங்களில் விரைந்து செயலாற்றும் திறனை இந்தியா பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்,

பேரிடர் மேலாண்மையில் நவீன தொழில்நுட்பங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் திரு பி.கே. மிஸ்ரா வலியுறுத்தினார்.

இந்த இரண்டு நாள் மாநாட்டில் மாநில பேரிடர் மீட்புப் படைகள் மற்றும் தீயணைப்புத் துறையைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

கடந்த மாதத்தில் நாட்டின் சில்லறை பணவீக்கம் நான்கு புள்ளி ஏழு ஐந்து சதவீதமாக குறைந்துள்ளதாக புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் நுகர்வோர் விலைக் குறியீட்டுப் பணவீக்கம் 4 புள்ளி எட்டு மூன்று சதவீதமாக இருந்தது.

கடந்த மாத பண வீக்க விகிதம் கடந்த ஓராண்டில் மிகக் குறைவானது என அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்திற்கு வெளிமாநில மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு க ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் சுற்றுலாத்துறை திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், 2021-ஆம் ஆண்டில் 57 ஆயிரமாக இருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்த ஆண்டு முதல் நான்கு மாநிலங்களில் மட்டும் நான்கு லட்சத்து 97 ஆயிரமாக அதிகரித்துள்ளது என்றார்.

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த நான்கு மாதங்களில் பத்து லட்சத்து 14 ஆயிரமாக அதிகரித்துள்ளது என்றும் திரு ராமச்சந்திரன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தேனி மாவட்டம் முல்லைப் பெரியாறு அணையின் பராமரிப்புப் பணிகள் குறித்து மத்திய கண்காணிப்புப் குழுவினர் இன்று ஆய்வு மேற்கொள்கின்றனர்.

தமிழக – கேரள அரசு உயரதிகாரிகள் மற்றும் இரு மாநில தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட இந்த குழுவினர், ஆய்வுக்குப் பின், அணையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்பு பணிகள் குறித்து ஆலோசனை வழங்குவார்கள் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ராஜ்குமார் ) -40----- செண்ட்*

[]<<<>>>[]

நாடு தழுவிய அளவிலான 21-வது கால்நடைகள் கணக்கெடுப்புப் பணி செப்டம்பர் மாதம் தொடங்கி டிசம்பர் மாதம் வரை நடைபெறவுள்ளதாக மத்திய கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப் பிரதேசம் ஜிரோவில் கால்நடை கணக்கெடுப்பு தொடர்பான பயிலரங்கம் நேற்று நடைபெற்றது.

இதில் காணொலி வாயிலாக பங்கேற்று பேசிய கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை செயலாளர் திருமதி அல்கா உபாத்யாயா, நவீன மொபைல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் என்றார்.

21-வது கால்நடை கணக்கெடுப்புக்காக அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் மாநிலங்களின் கால்நடை பராமரிப்புத் துறை மூத்த அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நாடு முழுவதும் கால்நடை கணக்கெடுக்கும் பணி நடத்தப்படுகிறது.

[]<<<>>>[]

பாலஸ்தீனத்தின் வளர்ச்சிக்காக கடந்த சில ஆண்டுகளில் இந்தியா 120 மில்லியன் டாலர் நிதி உதவியை வழங்கியுள்ளது என்று வெளிநாடுவாழ் இந்தியர்கள் விவகாரங்கள் பிரிவுச் செயலாளர் திரு முக்தேஷ் பர்தேஷி தெரிவித்துள்ளார்.

ஜோர்டான் தலைநகர் அம்மானில் நேற்று நடைபெற்ற காசாவுக்கான அவசர உதவி தொடர்பான கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்,

பாலஸ்தீனத்துக்கான வளர்ச்சி நிதியுதவியாக இந்தியா ஆண்டுதோறும் 25 மில்லியன் டாலரை வழங்குவதாக அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

**Perugia** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இத்தாலியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், இத்தாலியின் அலசாண்ட்ரோ கியானஸியை 0-6, 7-5, 7-6 என்ற செட் கணக்கில் வென்றார்.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் அமெரிக்கா-வுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சூப்பர் எட்டு சுற்றுக்கு தகுதிபெற்றது.

நியுயார்க்கில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த அமெரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் எட்டு விக்கெட் இழப்புக்கு 110 ரன் எடுத்தது.

111 ரன் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்தியா 18 புள்ளி இரண்டு ஓவரில் மூன்று விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

நேற்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றதை அடுத்து இந்தியா சூப்பர் எட்டு சுற்றுக்கு தகுதிபெற்றது.

**[]<<<>>>[]**